**கா**லை
பனியாய் மீந்திருக்கும் மரத்தின்மேல்
பாய்ந்து வந்து
காலிரண்டை உயர்த்தி
வால் நிமிர்த்திப் பார்க்கிறாய்
அணில் குஞ்சே
வா என் மனக் கிளைகளில் தாவு
இதயத்தைப் பழமாகத்
தருகிறேன்
குடைந்துகுடைந்து பசியாறு

உன் குன்றிமணிக் கண்களில்
மிதக்கும் கனவுக்குள்
என்னை எழுதுகிறேன்
இடம் கொடு என் அணில் குஞ்சே

இன்று உன்னோடு கண்விழித்தேன்
மரத்தில் கவிந்திருக்கும்
மார்கழிப் பனியைப் போல
என் முகத்தில் படர்ந்திருக்கிறது
உன் கூந்தல்
உன் கழுத்தின் கதகதப்பை
உதட்டில் உணர்ந்தபடி
புலன்களைத் திரட்டிக் கண்டெடுக்கிறேன்
என்னை
அணைத்திருக்கும் கையொன்று
ஆடையற்ற முதுகில் காதலை எழுதுகிறது
இன்னொன்றோ அதனடியில்
கையொப்பமிடுகிறது

சூரியனின் முதல் கிரணங்களில் ஒன்றையெடுத்து
ஆராய்கிறேன் உன் முகத்தை
அதை விழிகளில் வாங்கி ஆயிரம்
நட்சத்திரங்களாய்
இரைக்கிறாய் என்மீது

புலரத் தொடங்கிய பொழுதோ
திரும்புகிறது இரவுக்குள்

இன்று நேற்றுபோலில்லை
என்றபோதும்
நினைத்ததுபோலவும் இருக்கவில்லை

நீ பாறையாய் இறுகிக்கொள்ள
நான் அலையாய் அறைந்துகொண்டிருந்தேன்
மின்னலுக்கு வழிவிட்டு மூடிக்கொள்ளும்
முகிலென
முத்தங்களை மட்டும்
அனுமதித்து அடைத்துக்கொண்டது
உன் தேகம்

உடைகளின் நெகிழ்ச்சியை மறுதலித்தது
உடலின் இறுக்கம்
காதுமடல்களும் குளிர்ந்து கிடந்தன

கடிகையில்
இறங்கும் மணலைப்போல காலம்
தீர்ந்துகொண்டிருக்க
நுணுக்கிய கற்பூரத்தோடு
திரியின் முனையைத் தேடிக்கொண்டிருந்தது
என் காமம்

சொற்களின் சாவிக் கொத்தில்
எது உன்னைத் திறக்குமெனத் தெரியாது
ஒவ்வொன்றாய்ச் சோதித்துக்கொண்டிருந்தபோது
'அம்மா' என்றொரு சொல்லைக் கேட்டாய்
அடைமழைக் காலத்துக்
குளமாய் உடைந்தாய்

பூத்துக் கிடக்கும்
முந்திரிக் காட்டில் நுழைந்ததுபோல்
மூச்சுத்திணற வைக்கிறது
உன் நினைவு

வேறு எதையும் நினைக்காவண்ணம்
நாசி நிறைக்கும் தாழம்பூ வாசனையாய்
நொடிகளில் எல்லாம் படிந்திருப்பாய்

மேய்த்துத் திரும்புகையில்
ஆடொன்றைத் தவறவிட்ட
சிறுவனாய்ப் பதறுகிறேன்

வீதியில்
கையிலிருந்த பலூனைக் காற்று பிடுங்கிச் செல்ல
அலறுகிறாள் ஒரு சிறுமி

இறவாணத்தில் கட்டிய ஏணையில்
எலியொன்று இறங்குகிறது
குழந்தை சிரிக்கிறது

வேம்பின் நிழல்கூடத் தகிக்கும் கோடை

வெடிப்போடிய வயலில்
உண்ணி பிடுங்கும் காக்கைகளைச் சுமந்தபடி
தரையைக் கரண்டும் எருமைகளைப்
பார்வையால் மேய்க்கிறான் சிறுவன்

தார் இளகி
மழைபெய்து நனைந்ததுபோல் கிடக்கும்
சாலையில்
கானல் புகையெழும்பி வானேகும்

கழுத்தில் வழியும் வியர்வையைத் துடைத்தபடி
காய வைத்த இட்லித் துணியைப் போலிருக்கும்
மொடமொடத்த சொற்களை
என்மீது வீசுகிறாய்

அன்பையும் உறிஞ்சிக்கொண்டுவிடுமா கோடை?
என்று திகைத்து அமர்ந்திருக்கிறேன்

சாக்குப் பைக்குள் போட்டு
ஊர் தாண்டி அவிழ்த்துவிட்டு வந்தாலும்
நமக்கு முன்னால் வீட்டில் நிற்கும்
பூனையைப்போல்
இப்போதும்
உன் காலையே சுற்றுகிறதென் நினைவு